பதிவுத்துறைத்தலைவர் அலுவலகம்,

சென்னை-28.

# சுற்றறிக்கை

எண் 189/C1/2013, நாள் 02.02.2013.

பொருள் : ஆவணப்பதிவு நடைமுறை -பொது அதிகார ஆவணத்தின்படி பதிவு செய்யப்படும் ஆவணங்களின் பதிவின் போது முதல்வர் உயிருடன் உள்ளார் என Life certificate பெறுவது குறித்து

பார்வை : இவ்வலுவலக சுற்றறிக்கை எண் 189/சி1/2013-1 நாள் 7-1-13

******

பார்வையில் காணும் பொது அதிகார ஆவணம் குறித்த சுற்றறிக்கையின் தொடர்ச்சியாக கீழ்காணும் நடைமுறை பின்பற்றுமாறு தெரிவிக்கப்படுகிறது. 1.2.2013க்கு பின்னர் பதிவு செய்யப்படும்

(1) பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் முகவரால் எழுதி கொடுக்கப்படும் ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும்போது பொது அதிகாரம் அளித்த முதல்வர் உயிருடன் உள்ளார் என்பதற்கான" உயிருடன் உள்ளார்" என்ற சான்றும் (Life Certificate) தாக்கல் செய்யப்படவேண்டும். இந்த சான்றில் முதல்வரின் புகைப்படம் ஒட்டி அவரின் கையொப்பத்துடன், பதிவு பெற்ற மருத்துவ அலுவலரால் (Registered Medical Practitioner) அல்லது மத்திய / மாநில அரசு A பிரிவு அலுவலரால் தேதியுடன் பெறப்பட்ட சான்று தாக்கல் செய்ய வேண்டும்.

(2) இந்த Life Certificate அளித்தால் மட்டுமே 1.2.2013க்குபின் பதியப்பட்ட பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் தாக்கல் செய்யப்படும் ஆவணம் பதிவுக்கு அனுமதிக்கப்பட வேண்டும். Life Certificate மாதிரி படிவம் இத்துடன்

Verified RealEstate ™

இணைக்கப்பட்டுள்ளது. அதில் குறிப்பிட்ட விவரங்களுடன் சான்று இருத்தல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

(3) ஆவணம் பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் தேதிக்கு முன் 30 நாட்களுக்குள் இச்சான்று வழங்கப்பட்டிருக்க வேண்டும். அதற்கும் முன்பாக சான்று வழங்கப்பட்டிருந்தால் அச்சான்று செல்லத்தக்கதல்ல.

(4) Life certificate அசலை ஆய்வு செய்து, பின்னர் அதனை நகலுடன் சரிபார்த்து ஆவணத்துடன் ஒளிவருடல் செய்யயப்படவேண்டும். அசல் சான்றினை திருப்பி அளிக்கப்படவேண்டும்.

(5) பொது அதிகார ஆவணங்களின் மூலம் கிரையம் பெறப்படும் (Purchase Power) ஆவணங்களுக்கு இச்சான்று கோர தேவையில்லை.

(6) நிறுவனத்தினால் எழுதி கொடுக்கப்படும் பொது அதிகாரம் ஆவணங்களுக்கு இச்சான்று கோரத் தேவையில்லை.

(7) பொது அதிகார ஆவணம் பதிவு அலுவலகத்தில் தாக்கல் செய்யப்பட்ட நாளிலிருந்து மேற்படி பொது அதிகார ஆவணத்தின் அடிப்படையில் 30 நாட்களுக்குள் தாக்கல் செய்யப்படும் ஆவணங்களுக்கு மேற்படி Life certificate கோர வேண்டிய அவசியமில்லை.

(8) 1/2/2013 அன்றோ அதற்கு முன்னரோ பதிவு செய்யப்பட்ட பொது அதிகார ஆவணம் தொடர்பான பதிவுகளுக்கு மேற்படி Life certificate கோர வேண்டிய அவசியமில்லை.

(9) வெளிநாடுகளில் எழுதி தரப்பட்ட (Adjudication செய்யப்படும்) பொது அதிகார ஆவணங்களுக்கு இச்சான்று கோரப்பட வேண்டும்.

Verified RealEstate™

10) 1.2.2013 தேதிக்கு பின் பதிவு செய்யப்படும் பொதுஅதிகார ஆவணங்களில் "இவ்வாவணத்தின் அடிப்படையில் எழுதி கொடுக்கப்படும் ஆவணங்கள பதிவுக்கு தாக்கல் செய்யப்படும் போது பொது அதிகாரம் அளித்தவரின் 'Life Certificate' உடன் தாக்கல் செய்யப்படவேண்டும்" என்ற விவரம் ஆவணத்தில் குறிப்பு சேர்த்து திரும்ப வழங்கப்படவேண்டும்.

(11) இதன் விவரத்தை பொது அதிகாரம் ஆவணம் பதிவு செய்யப்படும் போது ஆவணதாரர்களுக்கு தெரிவிக்கப்படவேண்டும்.

இந்நடைமுறை 4.02.2013 முதல் அமலுக்கு வருகிறது. மின் அஞ்சலில் அனுப்பப்படும் இச்சுற்றறிக்கைக்கு ஒப்புதல் அளிக்குமாறு கோரப்படுகிறது.

ஒம்/- 02.02.2013.
பதிவுத்துறைத்தலைவர்

/ஆணைப்படி/

4.2.2013

பதிவுத்துறைத்தலைவருக்காக.

4/2/13

பெறுநர்
அனைத்து சார்பதிவாளர்கள்,
நகல் : 1.அனைத்து துணைப்பதிவுத்துறைத்தலைவர்கள்.
2.அனைத்து மாவட்ட பதிவாளர்கள்,
3.இயக்குநர், பதிவுத்துறை பயிற்சி நிலையம், சென்னை.
4.முக்கிய ஆணை கோப்பு.

Verified RealEstate™

# LIFE CERTIFICATE FOR THE PURPOSE OF REGISTRATION OF DOCUMENTS BASED ON POWER OF ATTORNEY.

| | |
|---|---|
| | Photo |

------------------SIGNATURE OF THE INDIVIDUAL

Certified that the individual named Shri/Smt.Ms. s/o address

who has signed in my presence and whose photo has been attested by me , is alive, as on this date.

| | |
|---|---|
| Name : | |
| Designation of Registered Medical Practitioner with Registered No./ 'A 'group officer | |

Seal/No. of Regd. Practioner/'A'Group officer

| | |
|---|---|
| Place : | |
| Date : (in words) | |

- ID No. for Group 'A' groupOfficers should be their GPF No./PAN Card No./Aadhar No./Voter ID.

- The Medical Practitioner/'A' group Officer should attest the Photo of the individual and half of the Signature should be on the Photo and other half on this paper.

Sd/- 02.02.2013
Inspector General of Registration

/By Order/

for Inspector General of Registration.

Verified RealEstate TM